[1969 செப்டம்பர் 12

விண்ணப்பம் ஏதும் அரசுக்கு இதுவரையில் வரவில்லை. 1968-69-ம் ஆண்டில் மாம்பாக்கத்தில் இருந்து ஒரு விண்ணப்பம் வந்தது. ஆனால், மாம்பாக்கத்தில் உயர்நிலைப்பள்ளிக்கு இருக்க வேண்டிய போதுமான எண்ணிக்கை மாணவர்கள் இல்லாத காரணத்தால், அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

Vidwan Examination in Telugu.

* 236. Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(a) Whether there is any proposal to request the University of Madras to constitute "Vidwan Examination" course in Telugu with a view to overcome the dearth of Telugu pandits in high schools of our State and also to encourage and develop Telugu; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : There is great dearth of Telugu pandits in high schools in Madras State. In Hosur taluk, for 14 high schools, we have only 3 Telugu Pandits and two are about to retire. Secondary-grade teachers are allowed to teach and they are not able to teach. The standard is going down. Previously Vidwan examination was being conducted by Madras University for Telugu also. I myself have passed that examination from this University. Not only was that examination attractive and useful; it was also ideal. To remove the present dearth of Telugu Pandits, will the Government start a training school and revive the Telugu Vidwan examination so that Telugu students could be helped?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது தெலுங்குப் பண்டிதர்களைப் பொறுத்து பற்றாக்குறை இருப்பதாகத் தெரியவில்லை. நமக்குத் தேவையாக இருந்தாலும் வெங்கடேசுவரா பல்கலைக் கழகம், ஆந்திராப் பல்கலைக் கழகம் இங்கே படித்து தெலுங்கு வித்வான் பட்டம் பெற்றவர்களை நியமித்துக் கொள்ள அரசு ஆயத்தமாக இருக்கிறது. ஆகவே, நாம் தனியாக ஒரு பள்ளியை ஏற்படுத்தி ஆண்டுதோறும் தெலுங்கு பண்டிதர்களை உண்டாக்க வேண்டிய நிலை இல்லை. ஆயினும், தனியார் யாராவது பல்கலைக் கழக அனுமதியுடன் ஒரு பள்ளியை ஏற்படுத்த முன்வந்து அரசாங்கத்திடம் நிதி உதவியை நாடினால் அரசாங்கம் அதுபற்றிப் பரிசீலிக்கும்.

திரு. சோ. அழகர்சாமி : நம் மாநிலத்தில் எத்தனை உயர்நிலைப் பள்ளிகளில் தெலுங்குப் பண்டிதர்கள் பணியாற்றி வருகிறார்கள்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

1969 செப்டம்பர் 12]

Thiru B. VENKATASWAMY : From the answer given by the Hon. Minister, it appears that there is no dearth of Telugu Pandits. May I request the Hon. Minister to state how many qualified Telugu Pandits are now working in Telugu schools in the State of Tamil Nadu?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய முழு விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

Thiru K. S. KOTHANDARAMIAH : The Hon. Minister said that he would invite Telugu Pandits from Andhra State, in case need for Telugu Pandits arise here. May I say that even in Andhra Pradesh, there is dearth of qualified Telugu pandits. If we permit Telugu candidates here to appear privately and pass Vidwan examination, we will be encouraging our own people in Madras State. They can appear and pass the examination and become Telugu Pandits in Madras State itself?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலில் சொல்லியபடி ஒரு பள்ளி வைக்க யாராவது தனியார் பல்கலைக் கழக அனுமதியோடு முன்வந்தால் நாமும் அனுமதி வழங்க முற்படலாம்.

M. N. O.-க்களுக்கு சீருடை.

* 237 வினா.—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடை யளிப்பாரா—

அரசாங்க மருத்துவ மனைகளில் **M. N. O.**க்களுக்கு சீருடை வழங்கும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

திரு. பி. எஸ். மணியன் : சீருடை வழங்குவது சட்டத்தில் இருந்தாலும் கூட மதுரை போன்ற அரசாங்க மருத்துவ மனையில் சீருடை வழங்கப்படாத காரணத்தினால், உள்ளே உள்ளவர் களுக்கும், வெளியில் உள்ளவர்களுக்கும் வித்தியாசம் தெரியாத நிலை இருப்பதால், உடனடியாக சீருடை வழங்கும் திட்டத்தை அமலுக்குக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மதுரை நகரத்தில் சீருடை வழங்கப்படுகிறது. சுற்றுப்புற நகரங்களில் எப்படி இருக்கிறதோ ! ஆயினும், இதுபற்றி குறிப்பிட்டு, எந்த இடத்தில் என்பதை கவனத்திற்குக் கொண்டுவந்தால் கவனிக்கப்படும்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை நகரத்தில் உள்ள ஆஸ்பத்திரியில் இரண்டாண்டுக் காலமாக சீருடை வழங்கப்படவில்லை என்பதை நானே தெரிவித்திருந்தேன். அப்படி யின்றி தொடர்ந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.